முதன்மை அமர்வு நீதிமன்றம், கடலூர் மாவட்டம், கடலூர்.

அமர்வு வழக்கு எண் : 126/2023

அரசுதரப்பு 3வது சாட்சியின் வாக்குமூலம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | இராதாகிருஷ்ணன் | வயது | : | 62 |
| தந்தை/ கணவர் பெயர் | : | தங்கவேல் | தொழில் | : | |
| கிராமம் | : | | ஜாதி | : | |
| தாலூக்கா | : | உளுந்தூர்பேட்டை | சமயம் | : | |
| மாவட்டம் | : | கள்ளக்குறிச்சி | | : | |

இந்திய உறுதிமொழிச்சட்டம் (44/1969)–ன் விதிமுறைகளின்படி 24.03.2026 ஆம் நாளாகிய இன்று மேற்படி சாட்சிக்கு முதன்மை மாவட்ட நீதிபதியால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் விழுப்புரம் மாவட்டம் நல்லான்பிள்ளை காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து 30.04.2022 அன்று விருப்ப ஓய்வு பெற்று தற்போது உளுந்தூர் பேட்டையில் வசித்து வருகிறேன். நான் கடந்த 29.06.2019அன்று ஆலடி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியிலிருந்த போது பகல் 11.30 மணிக்கு எனக்கு உதவியாக அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர்கள் சகிதம் மணல் கடத்தல் தடுப்பு சம்மந்தமாக கண்காணித்து சென்ற போது, கொட்டாரகுப்பம் ஆஞ்சநேயர் கோவில் அருகில் விருத்தாசலம் நோக்கி சந்தேகத்திற்கு இடமாக வந்த TN 90 4621 என்ற எண்ணுள்ள முன் புறம் வானவில் ஸ்ரீமுருகா என்று எழுதப்பட்டிருந்த டாரஸ் லாரியை நிறுத்தி மேற்படி லாரியை சோதனை செய்ய லாரிக்குள் சுமார் 6 யூனிட் அளவிற்கு ஆற்று மணல் இருந்தது. அதை பற்றி அதன் ஓட்டுனரிடம் விசாரிக்க

தனது பெயர் முத்தையா வயது 27 த/பெ. பெருமாள், செட்டியார் தெரு, ஆசனூர், உளுந்தூர்பேட்டை தாலுக்கா, விழுப்புரம் மாவட்டம், என்றும் மேற்படி டாரஸ் லாரி எங்கள் ஊரைசேர்ந்த வீரமணி த/பெ.கண்ணன் என்றும் ஆற்று மணலை திருச்சி விராலிமலை அருகில் இருந்து திருட்டு தனமாக ஏற்றி வருவதாகவும் மேற்படி ஆற்றில் இருந்து மணலை எடுப்பதால் பொதுமக்களுக்கும் குளங்களுக்கும் குடிநீருக்கு ஆதாரமான நிலத்தடி நீர் பாதிக்கும் என்று தெரிந்தும் சுயலாபம் கருதி அதிக லாபத்திற்கு விற்று பணத்தை பிரித்து கொல்லலாம் என்றும் லாரி உரிமையாளர் ஆசை வார்த்தை கூறியதின் பேரில் மேற்படி மணலை ஏற்றி வந்ததாகவும் இதற்கு எந்தவித அரசு அனுமதியோ பர்மிட்டோ இல்லை என்று கூறியதின் பேரில் மேற்படி எதிரியை கைதுக்கான காரணம் கூறி 11.40 மணிக்கு கைது செய்தேன். எதிரி எவ்வித துன்புருத்தலும் அச்சுறுத்தலும் இன்றி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை அதே சாட்சிகள் முன்னிலையில் 11.45 மணிக்கு பதிவு செய்தேன். ஆற்று மணலுடன் கூடிய டாரஸ் லாரியை 12.30 மணிக்கு எங்கள் முன்னிலையில் மகஜரில் கைப்பற்றினேன். கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.1 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. வழக்கு சொத்து எண் 210/2019, தற்போது என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள வாகனம் தான் கைப்பற்றப்பட்டது ஆகும். எதிரி மற்றும் வழக்கு சொத்து சகிதம் 13.00 மணிக்கு நிலையம் கொண்டு வந்து எதிரி மீது ஆலடி காவல் நிலைய குற்ற எண். 96/2019 சட்ட பிரிவு 379, 430, IPC r/w 21(1) MM ACT ன் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். முதல் தகவல்அறிக்கை **அ.த.சா.ஆ. 2** ஆகும், பின்பு எதிரியை திரேக பரிசோதனை செய்து நீதிமன்ற அடைப்பு காவலுக்கு உட்படுத்தினேன். வருவாய் வட்டாட்சியரிடம் மணலை ஒப்படைத்து சான்று பெற்றேன்.

அந்த சான்று **அ.த.சா.ஆ. 3** ஆகும். வாகனத்தினை படிவம் 91 ன்மூலம் நீதிமன்றத்தில் ஒப்படைத்தேன். படிவம் 91 **அ.த.சா.ஆ. 3** பட்டியல் சாட்சிகள் 1 மற்றும் 2 யை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தேன். இறுதியாக எனது விசாரணை முடித்து எதிரியின் மீது இறுதி குற்றப்பத்திரிக்கை தாக்கல்செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** –

புகார் காலத்திற்கு முன்போ பின்போ கனிம வளத்துறைக்கோ வருவாய் துறைக்கோ தகவல் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். திருச்சியில் உள்ள விராலிமலைக்கு சென்று மணல் அள்ளப்பட்டதாக சொல்லும் இடம் என்று சென்று பார்த்து வரைபடம், பார்வை மகசர் தயார் செய்யப்படவில்லை என்றால் சரிதான். வாகனம் கைப்பற்றியதாக சொல்லும் இடத்திற்கு பார்வை மகசர், வரைபடம் தயார் செய்யவில்லை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் காலம் 3சில் பொதுநாட்குறிப்பு விவரம் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கைக்கு முன்பு தனிஅறிக்கை எதுவும் கொடுத்து அதன் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். மகசரில் மணல் அள்ளியதற்கான உபகரணங்கள் எதுவும் கைப்பற்றவில்லை என்றால் சரிதான். எனக்கு நேரடியாக மணல் வழக்கில் முதல் தகவல்அறிக்கை மற்றும் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்ய அதிகாரம் இல்லை என்றால் சரியல்ல. ஒப்புதல் வாக்குமூலம் டைப் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் சொல்வது போல் சொன்ன இடத்தில், சொன்ன விதத்தில் எந்த ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றாலும் ஒப்புதல் வாக்குமூலம் காவல்நிலையத்தில் எங்களால் தயாரிக்கப்பட்டது என்றாலும் சரியல்ல.

இந்த வழக்கின் வாகனத்தின் உரிமையாளர் யார் என்று விசாரணை செய்யாமல் 2ஆம் எதிரியின் மீது தவறாக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அது போல இந்த வழக்கில் நானே முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, நானே கண்ணுற்ற சாட்சியாக இருந்து, நானே புலன் விசாரணை மேற்கொண்டு நானே இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளது குற்ற நடைமுறைசட்டத்திற்கு எதிரானது என்றால் சரியல்ல. வழக்கிற்கு அனுசரணையாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு ஆவணங்கள் அனைத்தும் காலதாமதமாக காவல் நிலையத்தில் தயார் செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. வருவாய் வட்டாட்சியரிடம் 18 நாட்கள் கழித்து 17.10.2019 அன்று தான் மணல் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த காலதாமதத்திற்கு காரணம் வழக்கிற்காக ஆவணங்கள் பின்னிட்டு தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கிற்கும் எதிரிக்கும், வாகனத்திற்கும் சம்பந்தம் இல்லை என்பதும் புள்ளி விவரக் கணக்கிற்காக போடப்பட்ட வழக்கு என்பதும் சரியல்ல. நான் யாரையும் விசாரிக்காமல் சம்பவ இடம் சென்று சரிவர விசாரணை செய்யாமல் எதிரியின் மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.